THE WORLD NEEDS THE WORD
IBT

ஜூலை 2024
மலர் 22, இதழ் 10

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# பரலோக ராஜ்யத்திற்குள் நுழையும் தகுதி



# பரலோக ராஜ்யத்திற்குள் நுழையும் தகுதி

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

சென்ற இதழில் பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்குத் தேவையான மூன்று தகுதிகளைப் பற்றி சிந்தித்தோம். முதலாவது தகுதி 1) நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் (யோ. 3 : 3). ஆம்! நாம் ஆண்டவருடைய வசனத்தின் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் ஆண்டவருடைய ராஜ்யத்தில் குடிமகனாகப் பிறக்க வேண்டும் - மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதைக் குறித்து நிக்கொதேமு ஆச்சரியப்பட்டது போல நாமும் ஆச்சரியப்படாமல் (யோ. 3 : 7), நம்முடைய பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்பி, இயேசுவை நமது இருதயத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள கால தாமதம் செய்ய வேண்டாம். இரண்டாவது தகுதி, நாம் சிறு பிள்ளைகளைப் போல் மாறி, தாழ்மையைத் தரித்துக் கொள்ள வேண்டும் (மத். 18 : 3,4). பெருமையோடு இருப்பவர்களுக்கு பரலோகத்தில் இடம் கிடையாது. தரை மட்டும் நம்மைத் தாழ்த்துவோமானால், ஆண்டவர் நம்மை வானபரியந்தம் உயர்த்தி, அவருடைய ராஜ்யத்தில் நம்மை ஏற்றுக்கொள்வார். இயேசுவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம் அவருடைய மனத்தாழ்மையும், சாந்தமும் என்பதை நாம் மறக்கக் கூடாது. மூன்றாவது தகுதி உபத்திரவத்தின் வழியாகத்தான் நாம் பரலோக ராஜ்யத்திற்குக் கடந்து செல்ல வேண்டும். ஆம்! சிலுவை இல்லையேல் சிங்காசனம் இல்லை. உபத்திரவம் இல்லையென்றால் நாம் உயர்த்தப்பட முடியாது. உபத்திரவத்தின் மூலமாகத்தான் இயேசு கிறிஸ்துவும், நமது இரட்சண்யத்தின் அதிபதியாக மாறினார் என்பதை (எபி. 2 : 10) நாம் மனதில் நிறுத்திக் கொள்வது நல்லது. கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணவேண்டாம். துன்பம் சூழ்கையில், நாம் துவண்டுவிடாமல், ஆண்டவரைத் துதிக்கும் துதி என்ற யாழ் எடுத்து அதை வாசித்து இன்புறக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து பரலோக ராஜ்யத்தில் சேருவதற்குத் தேவையான இன்னும் சில தகுதிகளை வேதத்தின் வெளிச்சத்தில் இந்த செய்தியில் சிந்திப்போம். இந்த உலகத்தில் பல சாம்ராஜ்யங்கள் தோன்றியதை நாம் சரித்திரத்தின் வாயிலாக அறிவோம். மகாப்பெரிய அலெக்சாண்டர் மூலமாக (கி.மு. 330) பரவிய கிரேக்க சாம்ராஜ்யமும், அலெக்சாண்டருக்குப் பின்பு உடைந்து போய் விட்டது. இயேசு பிறந்த காலத்தில் உலக முழுவதும் பரவி இருந்த ரோம சாம்ராஜ்யமும் உடைந்து சின்னாபின்னமாகியது. இவைகள் மாத்திரமல்ல, பெர்சியரின் சாம்ராஜ்யம், மொகலாய சாம்ராஜ்யம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் - எல்லா சாம்ராஜ்யங்களும் மங்கி, மறைந்து ஒழிந்து போய்விட்டன. ஆனால், இயேசு கிறிஸ்து தனது ராஜ்யத்தை இந்த உலகத்தில் அநேக மனித உள்ளங்களில் ஸ்தாபித்திருக்கிறார். "இதோ பரலோக ராஜ்யம் உங்கள் இருதயங்களில் இருக்கிறது," என்று (லூக். 17 : 21) கூறுகிறார். பூலோகத்திலே பூலோக ராஜ்யத்தை ஸ்தாபிப்பது அவரது நோக்கமல்ல (யோ. 18 : 36). ஆனால், இந்தப் பூலோகத்தில் பரலோக ராஜ்யத்தை ஸ்தாபிப்பது தான் இயேசுவின் திட்டம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பரலோக ராஜ்யத்தில் நாம் பிரஜைகளாக மாறவேண்டுமானால் அதற்கு என்ன தகுதிகள் வேண்டும் என்பதைத்தான் இந்தச் செய்தியில் தொடர்ந்து சிந்திக்கவிருக்கிறோம்.

***4. விடாமுயற்சி :***

*அதற்கு இயேசு : கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார் (லூக். 9:62).*

இந்த உலகத்தில் எந்தக் காரியத்திலும் வெற்றிபெற வேண்டுமானால் விடாமுயற்சியும், தைரியமும் அத்தியாவசியம் என்பதை நாம் அறிவோம். ஏரையும் எடுத்துக் கொண்டு

மாட்டையும் ஓட்டிக்கொண்டு வயலுக்கு வந்துவிட்டான். உழ ஆரம்பித்த பின்புதான் ‘உழுவது அவ்வளவு சுலபமல்ல’ என்பதை உணருகிறான். உழுவதற்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒப்புக்கொடுத்த பின்பு உல்லாசத்தை நாடலாமா? நெற்றி வேர்வையை நிலத்தில் சிந்திப் பாடுபடத் தீர்மானம் எடுத்த பின்பு அத் தீர்மானத்தில் நிலைதடுமாறுவது சரியா? ஆம்! நாம் பரலோக ராஜ்யத்தில் நுழைவதும் அவ்வளவு சுலபமல்ல; அதன் பாதையில் பல தடைகள், இடையூறுகள் இருக்கத்தான் செய்யும். தாவீது ராஜாவாக சிங்காசனத்தில் அமருவதற்கு முன்பு அவன் வனாந்தரத்திலே பல ஆண்டுகள் நாடோடியைப் போலவும், நாயைப் போலவும் அலைந்து திரிந்தான். சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்ததின் நிமித்தம் பவுல் எவ்வளவு பாடுகள், வேதனைகள் அனுபவித்தார். மூன்று முறை மிலாறுகளால் அடிபட்டார். 195 முறை யூதர்களால் சவுக்கடி வாங்கினார். ஒருமுறை சாகும் நிலமைக்கு கல்லெறி வாங்கினார். மூன்று முறை கப்பற் சேதத்தில் சிக்கினார். பல முறை திருடர்களிடம் சிக்கி தப்பியிருக்கிறார். பலமுறை சிறைக்குச் சென்றிருக்கிறார். அவருடைய சொந்த நண்பர்கள் மூலமாக மோசங்கள் வந்துள்ளது. அநேக முறை பிரயாசத்திலும், வருத்தத்திலும், கண் விழிப்பிலும், நிர்வாணத்திலும் இருந்திருக்கிறார். இவ்வளவு பாடுகள், இடையூறுகள், வேதனைகள் மத்தியிலும் பவுல் ஆண்டவருக்காக பல சாதனைகளை அவர் செய்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இதை வாசிக்கும் கிறிஸ்தவ சகோதரரே! இயேசுவை பின்பற்றுகிற காரணத்தினால் கஷ்டம், துன்பம் நீ சந்திக்க நேரும்போது, இப்படிப்பட்ட வாழ்க்கை எனக்கு வேண்டாம் என்று உன் மனதில் எண்ணம் ஏற்படுகிறதா? கலப்பை கடினமாக இருக்கிறது என்று எண்ணி ஆண்டவரின் வயலில் உழுவதையும், உழைப்பதையும் விட்டு விட்டு, ஓடிவிட நினைக்கிறாயா? கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சம்பவத்தை நீ வாசிப்பாயானால் நிச்சயமாக உன் முடிவை மாற்றிக்கொள்வாய்.

ஒரு சகோதரன் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு தனது கிறிஸ்தவ வாழ்க்கையில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். வேதத்தை வாசிப்பதில் அலாதிப் பிரியம் கொண்டிருந்த அந்த வாலிபன் திடீரென ஒரு குண்டு வெடிப்பில் எதிர்பாராத விதமாக சிக்கி தனது இரண்டு கைகளையும், இரண்டு கண்களையும் பறிகொடுத்து விட்டான். இந்த விதமான பரிதாபமான நிலையில், அவனுக்கு வேதத்தை எப்படியாவது வாசிக்கவேண்டுமென ஆவல் ஏற்பட்டது. இரண்டு கைகளும் இல்லை; இரண்டு கண்களும் இல்லை - என்ன செய்வது? ‘குருடர்கள் தங்களது கைகளினால் தொட்டு வாசிக்கும் அச்செழுத்துக்களை’ வரவழைத்து அதை தன்னிடம் மிஞ்சியுள்ள உறுப்பாகிய உதடுகள் மூலமாக வாசிக்கலாம் என தீர்மானித்தான். அதை வரவழைத்து அதில் தன் உதடுகளை வைத்த போது, அவனது உதடுகளின் நரம்புகளும் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டு, உணர்வை இழந்திருப்பதை உணர்ந்தான். இனிமேல் தன் வாழ்க்கையில் ஆண்டவருடைய வார்த்தையை வாசிக்கவே முடியாது என்ற துக்கத்தோடு, அதற்கு விடைகொடுக்கும் நோக்கத்தோடு அதை தன் நாவினால் முத்தமிட்டான். தனது நாவு இன்னும் உணர்வை இழக்கவில்லை என்பதை கண்டுகொண்டான். உடனே தன் நாவின் மூலமாக அந்த அச்செழுத்துக்களை வாசிக்கத் தீர்மானித்தான். அது மாத்திரமா “இதுவரை முழு வேதாகமத்தையும் நான்கு முறை வாசித்திருக்கிறேன்” என்று அவன் கூறுகிறான். என்ன தைரியம், விடாமுயற்சி, வேதத்தை வாசிப்பதில் எவ்வளவு பிரியம்.

இப்பொழுது சொல்லுங்கள்! இயேசுவைப் பின்பற்றுவதில் என்ன இடையூறுகள் வரினும் சோர்ந்து போவீர்களா? அல்லது வருவது வரட்டும், நடப்பது நடக்கட்டும் - என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு - என்று கூறி, ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள்

தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடத் தீர்மானித்துக்கொள்.

*ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12:1).*

*5) மற்றவர்களின் தேவைகளைச் சந்திக்கும் சேவை :*

*அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து : வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.*

*பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாக இருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்.*

*வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்... (மத். 25:34-36).*

பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு இன்னொரு தகுதி, தேவையோடு இருக்கிற ஜனங்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டும். நான் ஊழியம் கொள்ள வரவில்லை, ஊழியம் செய்யவே வந்தேன் – என்ற இயேசுவின் வார்த்தைகளை நாம் மனதில் நிறுத்துவது நல்லது. சமூக சேவை சுவிசேஷப் பணியல்ல; ஆனால், சுவிசேஷப் பணியில் சமூக சேவை ஒரு அங்கம். இங்கே இயேசு கூறும் வார்த்தைகளின் சாராம்சம்: ஏழை, எளியவர்களைப் பராமரிக்க வேண்டும்; நம்மிடத்தில் உள்ள எல்லாவற்றையும் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் நம்மிடத்தில் தேவைக்கு அதிகமாக இருப்பதையாவது மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிற சொத்து, நிலம், புலன், ஆஸ்தி அனைத்தும் நமது சுயநலமான உபயோகத்திற்காக மாத்திரம் ஆண்டவர் கொடுக்கவில்லை. ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தால் நமக்கு ஆண்டவர் கொடுத்துள்ள அனைத்து சொத்துக்களும், ஆஸ்தியும் ஆண்டவருக்குத்தான் சொந்தம். சில வருடங்களுக்கு நமது மேற்பார்வைக்கு நம்மிடம் ஒப்படைத்துள்ளார். காகத்தைக் கவனித்துப் பாருங்கள். அது ஏதாவது ஆகாரத்தைப் பார்த்தவுடன், எல்லோரையும் கா, கா என்று கரைந்து கூப்பிட்டு பகிர்ந்து உண்ணுகிறது. ஆனால், நாயோ அதற்கு எதிர்மறை. நாம் காகத்திடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நம்மில் சிலர், ஆண்டவரே எனக்குத் தாலந்தைத் தாரும் என்று ஜெபிக்கிறோம். ஆனால், வியாதிப் படுக்கையில் இருப்பவர்களைப் போய் விசாரிப்பதும், துக்கத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் சொல்வதும், சோர்ந்து போயுள்ளவர்களை உற்சாகப்படுத்துவதும் – ஒரு தாலந்து என்பதை நாம் மறந்து விடுறோம். ஒரு மிஷனெரியின் மகன் மூளை வியாதியால் பாதிக்கப்பட்டதினால் அவனை அவனது பெற்றோர்கள் இரவும், பகலும் அருகில் இருந்து கவனித்து வந்தார்கள். அவர்களிடம் வந்து, ‘‘உங்கள் மகன் டேவிட்டிற்காக நாங்கள் ஜெபிக்கிறோம்,’’ என்று சொன்னவர்கள் ஏராளம். அவர்களுக்கு இவர்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். உண்மைதான் – ஆனாலும் ஒரு சகோதரி அவர்களிடம் வந்து,

“அடுத்த வாரத்தில் எனக்கு ஒருநாள் விடுமுறை. அந்த நாளில் உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் மகன் டேவிட்டை அன்று முழுவதும் நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் அன்று ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்,'' என்று கூறினார். இப்படிப்பட்ட உதவிகளையும், ஒத்தாசையையும் நாம் மற்றவர்களுக்குச் செய்வதைத்தான் ஆண்டவர், “நான் வியாதியாக இருந்தபோது என்னை விசாரித்தீர்கள்,” என்று கூறுகிறார்.

சி.டி. ஸ்டட் தனது ஆஸ்திகள் அனைத்தையும் ஆண்டவருடைய பணிக்காக எழுதிக் கொடுத்தார். எல்லோரும் இப்படிப்பட்ட துணிச்சலும், தியாகமும் உடையவர்களாக இருக்க வேண்டுமென தேவன் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், இயேசுவின் பாதத்தில் பரிமள தைலத்தை உடைத்து ஊற்றிய மரியாளைப் போல, அவள் தன்னால் இயன்றதைச் செய்தது போல் நாமும் நம்மால் இயன்ற உதவிகளையும், ஊழியங்களையும், உதாரத்துவமான காணிக்கைகளையும் கொடுக்கவும், அந்நியரை உபசரிக்கவும், ஆடைகள் இல்லாதவர்களுக்கு ஆடைகள் கொடுக்கவும், பசி, பட்டினியால் வாடும் மக்களுக்கு ஆகாரம் கொடுக்கவும், ஜெயிலிலும், ஆஸ்பத்திரியிலும் உள்ளவர்களை விசாரிக்கவும், ஆண்டவரிடத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம். அனாதையாக ஆதரவற்ற குழந்தையாக தண்ணீரில் மிதந்து போன மோசேயின் அழுகையைக் கேட்டு பார்வோனின் மகளின் இருதயம் இளகி, அந்தக் குழந்தையின் மேல் இரக்கம் பாராட்டினாள் – என்பதை நாம் மறக்க வேண்டாம். நல்லசமாரியனின் அருஞ் செயலையும், அடிச்சுவடையும் பின்பற்றுவோம்.

*பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுபான்மையானவர்களை வீட்டில் சேர்த்துக் கொள்ளுகிறதும், ... உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் (ஏசா. 58:7).*

*இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான் (அப். 20:35).*

## 6. விசுவாசம் :

*என் பிரியமான சகோதரரே கேளுங்கள், தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா? (யாக். 2:5)*

ஆண்டவருடைய ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு, அவரிடத்தில் அன்பு கூறுவதும் அவர்மேல் விசுவாசம் வைப்பதும் – ஒரு தகுதியாக வைத்திருப்பது ஆச்சரியமில்லை. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் – என்ற வசனம்தான் மார்ட்டின் லூத்தர் மனம் மாறக் காரணமாக இருந்தது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாத காரியம் (எபி. 11 : 6). தான் போவது எங்கே என்பதை அறியாமல் இருந்தாலும், விசுவாசத்தினால் தேவன் அழைத்தவுடன் ஆபிரகாம் எழுந்து புறப்பட்டார், கீழ்ப்படிந்தார். நம் அனைவருக்கும் விசுவாசத் தகப்பனாக மாறினார். விசுவாசத்தின் மூலமாக யோசேப்பு இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தை விட்டு தன் எலும்புகளையும் சுமந்து கொண்டு கானான் தேசத்திற்கு புறப்பட்டுப் போவார்கள் என்றும் தீர்க்கதரிசனமாக உரைத்தார்.

ஆண்டவருடைய அருமையான பிள்ளையே! இயேசு கிறிஸ்துவின் மேல் நீ வைத்திருக்கும் விசுவாசம் சாதாரணமானதல்ல. அது மிகவும் விலையேறப்பட்ட மிகப்பெரிய பொக்கிஷம் என்பதை மறந்து விடாதே. நான் வேலை பார்த்த

பொறியியற் கல்லூரியில் ஒரு புதிய கம்ப்யூட்டர் வாங்கினோம். அதை நீங்கள் உபயோகப்படுத்த விரும்பினால் அதனுடைய மேற்பார்வையாளரிடம் கூறி உங்கள் பெயர் அவர் மூலமாக அதில் பதிவு செய்ய வேண்டும். சிலர் என்ன செய்வார்கள் பெயரைப் பதிவு செய்யாமலே ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்களது பெயர்கள் மூலமாக அந்தக் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்த முயலுவார்கள். அது பெயர் என்ன என்று கேட்டவுடன் யாராவது ஒரு பெயரைக் கொடுப்பார்கள். பெயருக்குப் பின்பு Password அனுமதிச் சொல் என்ன? என்று கேட்கும். அங்கு தான் மாட்டிக்கொள்வார்கள். காரணம், பதிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு Password கொடுத்திருப்பார்கள். இந்தப் Password பதிவு செய்தவர் ரகசியமாக வைத்திருப்பார். அது Computer Screen-ல் வராது. Password தவறாக இருந்தால் நீங்கள் அந்தக் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்த முடியாது. அதுபோலவே பரலோக ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு ஒரு Password அனுமதி வார்த்தை இருக்குமானால் அது நிச்சயமாக ''இயேசுவின் மேல் நாம் வைத்துள்ள விசுவாசமாகத்தான் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால், அப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் கிரியைகள் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில், *''கிரியையில்லாத விசுவாசம் செத்தது''* என்று வேதம் (யாக். 2 : 26) கூறுகிறது. சூழ்நிலைகள் நமக்குச் சாதகமாக இருக்கும் போது மாத்திரம் அல்ல, நமது வாழ்க்கையில் கார்மேங்கள் மூடும்போதும், புயல் வீசும் போதும் ஆண்டவர் மேல் நாம் வைத்திருக்கிற விசவாசத்தைத் தளரவிடக் கூடாது. அத்திமரம் துளிர்விடாமல் போனாலும், ஆட்டுமந்தையில் ஆடுகள் இல்லாமற் போனாலும், வயல்களில் தானியங்கள் விளையாமல் போனாலும் - நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்று ஆபகூக் தீர்க்கதரிசியைப் போல (ஆப. 3 : 17, 18) நாமும் நமது இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூரக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆப்பிரிக்காவிலுள்ள சகாரா பாலைவனத்தில் சில விசுவாசிகள் சிக்கிக் கொண்டார்களாம். உணவு இல்லாத காரணத்தால் அவர்களில் சிலர் பட்டினியால் சாகப்போகிறோம் என்று அவர்கள் நன்கு அறிந்து கொண்டார்கள். அந்த நிலையில் கூட அவர்கள் அனைவரும் கூடி ஆண்டவரை ஸ்தோத்தரித்து மகிமைப்-படுத்தினார்களாம். (அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் 1500 பேர்களோடு டைட்டானிக் கப்பல் மூழ்கிய போது, அதில் நூற்றுக்கணக்கான விசுவாசிகள் 'Nearer to thee' என்ற பாட்டை பாடிக்கொண்டே கடலுக்குள் மூழ்கினார்களாம். என்ன விசுவாசம்; என்ன தைரியம்). இப்படிப்பட்ட விசுவாசத்தைத்தான் ஆண்டவர் நமது வாழ்க்கையிலும் எதிர்பார்க்கிறார். இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்ள, அதைப் பேணி வளர்க்க நாம் ஆண்டவரிடத்தில் ஒப்புக்கொடுப்போமானால் நிச்சயமாக இயேசு அந்த நூற்றுக்கதிபதியையும், கானானிய ஸ்திரீயையும் பார்த்து, *''இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் இஸ்ரவேலர் மத்தியில் கண்டதில்லை'' (லூக். 7 : 9) ''ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது'' (மத். 15 : 28)* என்று அவர்களை மெச்சியது போல நம்மையும் நிச்சயமாகப் பாராட்டுவார்.

## *7. அன்பு :*

பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்கு விசுவாசத்தோடு அன்பும் தேவை என்பதை யாக். 2:5-இல் நாம் வாசிக்கிறோம். *'அன்பு'* என்ற அருமையான இந்த மூன்று எழுத்தில் எவ்வளவு வல்லமை அடங்கியிருக்கிறது. அன்பே தெய்வம் என்று சிலர் கூறும் அளவிற்கு அந்த அன்பு உன்னதமானது; உயரியது. பல ஆண்டுகளுக்கு முன்பு அன்னை தெரசா செய்யும் ஊழியத்தின் மேல் பொறாமையும், எரிச்சலும், ஆத்திரமும் அடைந்த அரசாங்க மேலதிகாரி ஒருவர் அன்னையின் ஆசிரமத்தில் வேகமாக கோபமாக நுழைந்தாராம். அப்படி நுழைந்த போது, அவர் கண்ட காட்சி அவரை ஸ்தம்பித்து நிற்க வைத்தது. அன்னை தெரசா அவர்கள் குஷ்டரோகிகளின் புண்களைக் கழுவி, அவர்களை குளிப்பாட்டிக்

கொண்டிருந்த காட்சியைக் கண்டார். ஏழையின் கண்களில் இறைவனைக் காண்கிறேன் என்ற கோட்பாட்டில் கிறிஸ்துவின் அன்பை - அன்னை தெரசா அவர்கள் செயல் முறையில் காண்பிப்பதைக் கண்டபின்பு அந்த அதிகாரி வாயடைத்து, செயல் இழந்தவராய் தான் வந்த வழியே திரும்பிப் போய் விட்டாராம்.

ஆம்! நாம் வாழும் இந்த உலகத்தில் மக்கள் அன்பிற்காக ஏங்கித் தவிக்கிறார்கள். உலகப் பிரசித்தம் பெற்ற ஒரு சினிமா நடிகை, பெயரும், புகழும் இருப்பினும் “என்னை உண்மையாக நேசிப்பதற்கு இந்த உலகத்தில் ஒருவருமே இல்லை” என்று குறிப்பு எழுதி வைத்துவிட்டு, தற்கொலை செய்து கொண்டாள். பரிசுத்த ஆவியின் மூலமாக தேவனுடைய அன்பு நமது உள்ளங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (1 யோ. 4 : 12, 13). அந்த உள்ளங்களிலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும் என்று வேதம் கூறுகிறது. அநேக முறை நான் அனுபவத்தில் கண்ட ஒரு உண்மை என்ன தெரியுமா? ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் மலையைப் பேர்க்கும் விசுவாசம் இருக்கலாம். இடி முழக்கத்தைப் போல பிரசங்கிக்கலாம். ஆனால், அவனது வாழ்க்கையின் மூலமாக நேசிக்க முடியாதவர்களை நேசித்து, அன்பு செலுத்த சற்றும் தகுதியில்லாதவர்களிடத்தில் அன்பு செலுத்தவும், கிறிஸ்துவின் அன்பை தனது செய்கையின் மூலமாக வெளிப்படுத்த தவறிவிடுகிறோம். இங்குதான் கிறிஸ்தவ மார்க்கத்தில் கீறல்களும், கோணலான கோடுகளும், கேடுகளும் காணப்படுகின்றன. அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் சகிக்கும், சினமடையாது, தீங்கு நினையாது. நீடிய சாந்தமும், தயவுமுள்ளது. நம்முடைய இருதயத்தில் தற்சமயம் குடியிருக்கும் அன்பு இத்தன்மையுடையதா? என்பதை நாம் ஆராய்வது நல்லது.

கொரியாவில் யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் கம்யூனிஸ்ட்டின் கலகக்காரர்கள் ஒரு கிறிஸ்தவரை கைதுசெய்து கொலை செய்யத் தீர்மானித்தார்கள். ஆனால், அவர் அநேக அனாதைப் பிள்ளைகளை வளர்க்கிறார் என்று கேள்விப்பட்டு அவரை உயிரோடு விட்டு விட்டு, அவருக்குப் பதிலாக அவரது மகனை தகப்பன் கண்களுக்கு முன்பாகவே சுட்டுக் கொல்கிறார்கள். சில நாட்கள் கழித்து யுத்தத்தின் தலைவிதி மாறியது. இவரது மகனை எவன் கொன்றானோ அவன் கைது செய்யப்பட்டு கொலை செய்யும்படியாக நீதிபதி உத்தரவிட்டார். அப்பொழுது இவர் நீதிபதியிடம் சென்று தன் மகனைக் கொன்றவனை மன்னித்து, தன்னிடம் ஒப்படைக்கும்படியாக மனு கொடுத்தார். அந்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு தன் மகனைக் கொன்ற கொலைகாரனை தனது மகனாக வளர்த்தார். அவனும் இரட்சிக்கப்பட்டு, ஒரு அருமையான போதகராக மாறினான். என்ன ஒரு ஆழமான அன்பு! நமது குடும்பத்தினரில் ஒருவரை யாராவது கொலை செய்திருந்தால் அப்படிப்பட்ட கொலைகாரனை ஒருவேளை வெறுக்காமல் இருக்க முடியும். ஆனால், அவனை நேசிக்க இயலுமா? அப்படிப்பட்ட உன்னதமான தெய்வீக அன்பை ஆண்டவர் நமக்கு அளவில்லாமல் அளிக்கும்படியாகவும், அதற்கு ஏற்றபடி நம்மை பக்குவப்படுத்தும்படியாகவும் அவரிடம் கெஞ்சிக் கேட்போம்.

*இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரிது (1 கொரி. 13 : 13).*

பரலோக ராஜ்யத்திற்குள் நுழைவதற்குத் தேவையான பல தகுதிகளைப் பற்றி இந்த இரண்டு செய்திகளிலும் சிந்தித்தோம். இதை வாசித்த நாம் ஒவ்வொருவரும் அந்தப் பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்கு தகுதியுள்ளவர்களாக இருக்கிறோமா என்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது. பரிசுத்த ஆவியின் மூலமாக, ஆண்டவருடைய வசனத்தின் மூலமாக மறுபடியும் பிறந்திருக்கிறோமா? இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? இன்றே இரட்சண்ய நாள். இப்பொழுதே அநுக்கிரக காலம். சிறு பிள்ளைகளைப் போல மாறி தாழ்மையைத் தரித்துக் கொள்வோம். உபத்திரவத்தின் மூலமாக, இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசிக்க மறந்து

போக வேண்டாம். கலப்பையின் மேல் கையை வைத்து விட்டு லோத்தின் மனைவியைப் போல பின்னிட்டுப் பார்க்காமல், விடாமுயற்சியோடு இலக்கை நோக்கித் தொடருவோம்: தேவையோடு நிற்கிற மக்களின் தேவைகளைச் சந்தித்து தியாகத்தோடு சேவை செய்யத் தீர்மானிப்போம். பரலோகத்தில் நுழைவதற்குத் தேவையான Password அனுமதிச் சொல்லாகிய விசுவாசத்தையும், எல்லாவற்றிலும் பெரிதான அன்பையும் எடுத்துக் கொண்டு ஆண்டவரின் பரலோக ராஜ்யத்தின் நுழைவாசலுக்கு நாம் செல்லும்போது, ஆண்டவர் நம்மைப் பார்த்து "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தப்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்," என்று நம்மை வரவேற்பார் என்பதில் சந்தேகமில்லை.

*பரலோகமே என் சொந்தமே*
*என்று காண்பேனோ*
*என் இன்ப இயேசுவை*
*என்று காண்பேனோ*

*சிலுவையில் அறையுண்டேன்*
*இனி நானல்ல இயேசுவே*
*அவரின் மகிமையே*
*எனது இலட்சியமே*

*இயேசு என் நம்பிக்கையாம்*
*இந்த பூமியும் சொந்தமல்ல*
*பரிசுத்த சிந்தையுடன்*
*இயேசுவை பின்பற்றுவேன்*

**- (Late) Rev. Prof. S.** *பன்னீர் செல்வம்*

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எங்கள் அன்பின் வாழ்த்துதலை சத்திய வார்த்தை பத்திரிக்கையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

*"...ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5 : 17).*

அந்த பட்டணத்திற்கு புதிதாக வந்த நபர், சாப்பிடுவதற்கு அருகிலுள்ள பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தார். வெளியே பார்வைக்கு ஹோட்டல் நன்றாக இருந்தாலும் உள்ளே சுத்தம் இல்லை. தேவையான வெளிச்சம் இல்லாதபடி உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. எந்த மேஜைக்கு சென்றாலும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. தவிர்க்க முடியாத நிலையில் சாப்பாட்டை வரவழைத்து சாப்பிடத் தொடங்கினார். ஆனாலும், குழம்பின் வாசனை குமட்டிக் கொண்டு வரவே, அரைகுறையாக சாப்பிட்டு கைகழுவி விட்டு வெளியே வந்தார். பார்க்க பெரிய ஹோட்டலாக இருந்த போதிலும், தரம் அனைத்திலும் மிக மோசமாக இருக்கிறதே என்றெண்ணிக் கொண்டு தன் ஊருக்கு பஸ் ஏறினார்.

இரண்டு வருடங்களுக்கு பிறகு, அதே நபர் அந்த பட்டணத்திற்கு வந்தார். உடனே இரண்டு வருடங்களுக்கு முன்பு தனக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தை மறுபடியும் நினைத்தவராய் பஸ் ஸ்டேன்டிற்கு எதிரேயிருக்கிற அந்த ஹோட்டலைப் பார்த்தார். அவருடைய கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை. ஏனெனில், ஹோட்டலின் முன்புறம் நிறைய கார்கள், பைக்குகள், மனிதர்கள் என்று கூட்டம் அலைமோதியது. உள்ளே வண்ண, வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இடம் முழுவதும் தூய்மையாயிருந்தது. உணவுகள் மிகவும் சுவையாயிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஈ விரட்டிக் கொண்டிருந்த ஹோட்டல் இப்பொழுது தலைகீழாக மாறிவிட்டதே என்று பார்த்தபொழுதுதான் தெரிந்தது. அது புதிய நிர்வாகத்தின் கீழ் (under new management)

இயங்குகிறது என்று. இந்த புதிய மாற்றத்திற்கான காரணம் புதிய நிர்வாகம்.

அன்பு சகோதர, சகோதரிகளே ஒரு நல்ல எண்ணம் கொண்ட நபர் மோசமான நிலையில் உள்ள ஹோட்டலை நல்ல நிலைக்கு மாற்ற முடியுமானால், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்வை மாற்ற எவ்வளவு வல்லமையுள்ளவர்.

*அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக் கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6 : 19).*

திட்டமிட்டபடியாகவே கடந்த மே மாதம் 10, 11, 12 தேதிகளில் கோவை ஆனைகட்டியிலுள்ள பெத்தானி கேம்ப் (மருத்துவமனை) வளாகத்தில் IBT ஊழியத்தின் லோகோஸ் முகாம் சிறப்பாக நடைபெற்றது. FMPB-இன் முன்னாள் செயலாளர் Rev. ஜான் கிருபாகரன் அவர்களும் நாகர்கோவில் Scots கல்லூரியின் முன்னாள் முதல்வர் Prof. ஜேம்ஸ் R. டேனியல் அவர்கள் இருவரும் தேவ செய்தியளித்தார்கள். 11-ஆம் தேதியன்று IBT மூலமாக *படுகா மொழியில் வேதாகமம், சம்பல்புரி, முண்டாரி மற்றும் போவி மொழிகளில் புதிய ஏற்பாடு, சௌராஷ்ட்ரா, மிர்கான், போஜ்புரி, சத்திஷ்காரி, சம்பல்புரி, சோரா, கலஹாண்டியா, குவி, தெஷியா, கடபா ஆகிய 10 மொழிகளில் சிறுவர் வேதாகமம்* TELC சபையின் முன்னாள் பேராயர் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் ஐயா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. மேலும் *பாடல் புத்தகங்கள் போஜ்புரி, சௌராஷ்ட்ரா, குவி, சோரா* மற்றும் *ஐந்து மொழிகளில்* **(Multilingual Song)** *பாடல் புத்தகங்களும்* பிரதிஷ்டை செய்து வெளியிடப்பட்டது. மூன்று நாள் கூடுகையின் விபரங்கள் புகைப்படங்களுடன் வரும் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன. இக்கூடுகைக்காக உழைத்தவர்கள், உதவி செய்தவர்கள், 3 நாட்களும் கலந்து கொண்டவர்கள், இக்கூடுகைக்காக ஜெபித்தவர்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து, காத்து வழிநடத்த ஜெபிக்கிறோம். தொடர்ந்து IBT ஊழியத்திற்காக, இதன் மூலம் தேவ நாமம் மகிமைப்பட ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்துக் காப்பாராக!

கர்த்தரின் பணியில்
*உங்கள் சகோதரன்*
*K. ஜெய்சிங்*

---

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# 2024 மே, 10, 11, 12 தேதிகளில் ஆனைகட்டி பெத்தானியா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற IBT லோகோஸ் 2024 முகாமின் நிகழ்வுகள்



IBT லோகோஸ் முகாமில் பங்கேற்றவர்கள்




IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள் IBTஊழியத்தைப் பற்றி விளக்கி, தேவனுக்கு நன்றி தெரிவிக்கிறார்.




நடனமாடும் ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர், சிறுமியர்கள்.




படுகா விசுவாசிகள் சிறப்பு பாடலைப் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



மிர்கான் மொழிபெயர்ப்பாளர் சகோ. கேசப் மிர்கான் தனது ஊழியத்தைப் பற்றி விளக்குகிறார்.



இரண்டாவது நாள் முகாமில் (11.5.2024) அதிக அளவில் கூடியிருந்த படுகா மக்களை வரவேற்று, அந்நாள் நிகழ்வுகளை நடத்திய IBT-யின் செயலர் திரு. G. வரமணிராஜ் அவர்கள்.

# IBT லோகோஸ் 2024 முகாமின் நிகழ்வுகள்




IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள் TELC முன்னாள் பேராயர் Rev.எட்வின் ஜெயக்குமார் மற்றும் அவர் மனைவிக்கும் லோகோஸ் முகாம் நினைவுப்பரிசை கொடுக்கிறார்.




சவால் நிறைந்த செய்தியளிக்கும் Rev.ஜான் கிருபாகரன் அவர்கள்.




வெளியிடவுள்ள அனைத்துப் புத்தகங்களையும் பேராயர் அவர்கள் பிரதிஷ்டை செய்யும் நேரம்.




படுகா மொழியில் உள்ள புனித வேதாகமத்தை, பேராயர் அவர்கள் வெளியிட மொழிபெயர்ப்பாளர்கள் திரு. சந்திரன், திருமதி. அனுராதா சந்திரன் இருவரும் பெற்றுக்கொள்கிறார்கள்.




படுகா மொழியில் உள்ள வேதாகமத்தை IBT–ன் தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள் வழங்க, Rev. பிலிப். K. மல்லி அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.



படுகா மொழியில் உள்ள வேதாகமத்தை படுகா மொழியின் Sponsor ஷார்ஜா AG தமிழ் சபையின் பிரதிநிதி திரு. கெர்சோம் அவர்கள் வழங்க, சகோ. ராமலிங்கம் பெற்றுக்கொள்கிறார்.

# IBT லோகோஸ் 2024 முகாமின் நிகழ்வுகள்




படுகா விசுவாசிகள் படுகா பாடலுக்கு நடனமாடி
தேவனைத் துதிக்கின்றனர்.



சம்பல்புரி மொழியில் உள்ள புதிய ஏற்பாடு புத்தகத்தை
சம்பல்புரி Sponsor, திரு. ரிச்சர்டு தேவராஜ் அவர்கள் வழங்க,
சகோ. ஜெயந்த் பானி பெற்றுக்கொள்கிறார்.



இருளா வெள்ளியங்காடு மொழியில் உள்ள சங்கீதம்
நீதிமொழிகள் புத்தகத்தை BSI Rev. Dr. N. சுப்பிரமணி
அவர்கள் வழங்க, சகோ. சாமுவேல் பெற்றுக்கொள்கிறார்.



போஜ்புரி மொழியில் உள்ள சிறுவர் வேதாகமத்தை
IBT-ன் இணை நிறுவனர் திருமதி. D. சுதந்திராதேவி அவர்கள்
வழங்க, சகோ. சுதிர்குமார் பெற்றுக்கொள்கிறார்.



சௌராஷ்ட்ரா மொழியில் உள்ள சிறுவர் வேதாகமத்தை
IBT பொருளாளர் திரு. ஜான் வில்லியம் அவர்கள் வழங்க,
சகோ. S.N. சங்கர் பெற்றுக்கொள்கிறார்.




சம்பல்புரி மொழியில் உள்ள சிறுவர் வேதாகமத்தை
திருமதி. நவமணி சேகர் அவர்கள் வழங்க,
சகோ. ஜெயந்த் பானி பெற்றுக்கொள்கிறார்.



தெஷியா மொழியில் உள்ள சிறுவர் வேதாகமத்தை
சகோ. ஜெய்சிங் (சத்திய வார்த்தை பத்திரிகை ஆசிரியர்)
அவர்கள் வழங்க, சகோ. கிறிஸ்துதான்
பெற்றுக்கொள்கிறார்.



கலகாண்டியா மொழியிலுள்ள சிறுவர் வேதாகமத்தை
IMS மிஷனெரி திருமதி. கிரிஜா ஐசக் அவர்கள்
வழங்க, சகோ. பீத்தாம்பர் மகனந்
பெற்றுக்கொள்கிறார்.

# IBT லோகோஸ் 2024 முகாமின் நிகழ்வுகள்



மதிய உணவு வேளை.



மொழிபெயர்ப்பு பணிகளை
விளக்கி கூறும் பணித்தள இயக்குநர்
திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.




சகோ. ரெஜி ஜெல்லிபாரா மற்றும் கேரளாவைச் சேர்ந்த
IBT ஆதரவாளர்கள் சிறப்புப் பாடலைப் பாடி
தேவனை மகிமைப்படுத்துகின்றனர்.



வேதாகம மொழிபெயர்ப்புப் பணிகளை விளக்கி கூறும்
Prof. ஜேம்ஸ் டேனியல் அவர்கள்.



IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள்
IBT சிறுவர் இல்லம் மிஷனெரிகளுக்கு
சிறப்பு பரிசை வழங்குகிறார்.



லோகோஸ் முகாமின் ஞாயிறு ஆராதனையை,
குழுவினருடன் துதி ஆராதனையை நடத்தும்
சகோ. ராஜகுமார் அவர்கள்.



வேத வினா போட்டி நடத்தும் சகோ. ராஜகுமார்
அவர்கள்.



IBT பணித்தள இயக்குநர் அவர்கள்
IBT-யின் மொழிபெயர்ப்பாளர்களை
அறிமுகப்படுத்துகிறார்.

# லோகோஸ் முகாம் - 2024

இந்திய வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் ஊழியத்தின் சிறப்பு வருடாந்திர முகாம் **லோகோஸ் –2024 மே மாதம் 10–ஆம் தேதி முதல் 12–ஆம் தேதி வரை** கோயம்புத்தூர் அருகில் ஆனைகட்டியில் பெத்தானி வளாகத்தில் மிகச்சிறப்பாக நடத்த கடவுள் நமக்கு உதவி செய்தார். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் IBT–யின் மொழி பெயர்ப்பாளர்கள், மிஷனெரிகள், முன்னேற்றப் பணியாளர்கள், அலுவலக ஊழியர்கள், IBT–யின் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகள், IBT பிரதிநிதிகள், IMS குழு, IBT–யின் பொறுப்பாளர்கள் உள்ளடக்கமாக 400–க்கும் மேற்பட்டவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டார்கள். இந்த முகாமின் ஆயத்த ஜெபக்கூட்டம் 09.05.2024 அன்று மாலை ***IBT–யின் தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள்*** ஜெபத்துடன் நடந்தது, மறுநாள் 10–ஆம் தேதி காலை 10 மணிக்கு முகாமின் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. IBT–யின் துணை நிறுவனர் திருமதி. சுதந்திரா தேவி அவர்கள் தொடக்க ஜெபத்தை ஏறெடுத்து, இந்த முகாமைத் தொடங்கி வைத்தார். பாடகர் குழுவினர் துதிப்பாடல்கள் பாடி, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். அதன்பிறகு ஒடிஷா மாநிலத்திலிருந்து வந்திருந்த நமது IBT சிறுவர் இல்லப் பிள்ளைகள் முகாமிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்கும் விதமாக நடனத்துடன் பாடல் பாடினர். தொடர்ந்து நமது IBT பொருளாளர் சகோ. ஜான் வில்லியம் அவர்கள் வந்திருந்த அனைவரையும் வரவேற்று, வரவேற்புரை ஆற்றினார். அதன்பிறகு IBT–இன் தலைவர் அவர்கள் பேசிய போது, கடந்த 5 ஆண்டுகள் IBT ஊழியத்தின் மூலம் நடந்த பல பணிகளின் மூலமாக வெற்றியைக் கொண்டாடும் நாள் இதுவே எனக்கூறி ஆண்டவருக்கு தம் நன்றியைத் தெரிவித்தார்.

அதன்பிறகு சகோ. ராஜகுமார் அவர்கள் வளாகத்தில் தங்கி இருக்கும் நபர்கள் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளையும், பின்பற்ற வேண்டிய காரியங்களையும் வீடியோ காட்சிகள் மூலம் தெளிவாக எடுத்துரைத்தார். தெஷியா மொழி பேசும் சிறுமிகள் அழகிய சுவிசேஷபாடல் ஒன்றை பாடி, ஆண்டவரை மகிமைப்படுத்தினர். முகாமின் முதல் செய்தியாக FMPB முன்னாள் பொதுச் செயலாளர் Rev. ஜான் கிருபாகரன் அவர்கள் முகாமிற்கு வந்திருந்த ஒவ்வொருவரும் கடவுளுக்கு அர்ப்பணித்து ஊழியம் செய்ய ஆயத்தப்படுத்தும் வண்ணமாக தேவ செய்தியை வழங்கினார். மோசே, ஆபிரகாம், சாமுவேல் போன்றவர்களை தேவன் அழைத்தது போல, நம்மையும் பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். பெசலெயேல் ஆண்டவரின் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட ஆண்டவரால் அழைக்கப்பட்ட மனிதராகவும், ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகவும் தான் கற்றுக் கொண்டதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கும் திறன் உடையவராகவும், இருந்ததைப் போல நாமும் அர்ப்பணிப்புள்ள ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளும் வண்ணம் கூறி தேவ செய்தியளித்தார்.

அதன் பிறகு ஒடிஷாவிலுள்ள கோயா சபை விசுவாசிகளும், பாப்பன்பள்ளி சிறுவர் இல்லப் பிள்ளைகளும் தங்கள் தாய் மொழியில் பாடல் ஒன்றைப் பாடியது போல, தமிழ் மொழியில் ஒரு பாடல் பாடி கர்த்தரைத் துதித்தார்கள். பிறகு படுகா மொழி பெயர்ப்பாளர்கள் சகோ. சந்திரன் மற்றும் அனுராதா அவர்கள் படுகா பாடல் பாடி தங்கள் மொழி பெயர்ப்பின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். சகோ. சந்திரன் அவர்கள் படுக மக்களைப் பற்றியும் அம்மொழியின் சிறப்பையும் எடுத்துரைத்தார். மொழிபெயர்ப்பு வேதாகம விநியோகப் பணிகள் அதனால் வந்த எதிர்ப்புகள் குறித்தும், இதன் மத்தியில், ஏராளமான சபைகள் உருவாகியுள்ளது எனக்குறிப்பிட்டார். பாஸ்டர் முத்தன், பாஸ்டர் பெல்லி ராஜ், பாஸ்டர் மல்லி அவர்கள் மொழி ஆலோசகராக துணை புரிந்ததையும், BSI–இல் பணிபுரியும் வேதாகம மொழிபெயர்ப்பு ஆலோசகர் Rev. Dr. சுப்ரமணி அவர்கள் படுகா வேதாகமம் மிகச் சிறப்பாகவும், துரிதமாகவும் வெளியீடு செய்வதற்கு பெரிதும் உதவியதை எடுத்துரைத்தார். இம்முகாமில் அநேக படுகா விசுவாசிகள் உற்சாகமாய் கலந்து கொண்டு தேவனைத் துதித்தனர். பிறகு சத்திஸ்கர் மாநிலத்தில் வாழும் குடுக் மொழிபெயர்ப்பாளர் சகோ. சோபத்ராம் குடும்பத்தினரும், போஜ்புரி

மொழிபெயர்ப்பாளர் சகோ. சுதிர்குமார் அவர்களும் அவரவர் மொழிகளில் ஒரு பாடல் பாடினார்கள்.

நமது IBT பணித்தள இயக்குநர் சகோ. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் ஊழிய அறிமுகத்தையும், IBT ஊழியத்தின் வளர்ச்சியைப் பற்றியும் கூறினார். ஒடிஷா மாநிலத்தில் பாப்பன்பள்ளி கிராமத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு IBT நிறுவனம் செய்து வரும் உதவியினால் அந்த ஊரில் உள்ள நக்சலைட் இயக்கத்தினர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அந்த ஊரை விட்டு விலகிச் சென்றதைக் குறிப்பிட்டார். இருப்பினும், கிறிஸ்தவராவதற்கு அவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் எனக் கூறினார். கோயா சிறுவர் இல்லப் பொறுப்பாளர்கள் திரு. சுவீடன் மற்றும் திருமதி. சுபிதா இருவரும் அர்ப்பணிப்பான ஊழியர்கள் என்றும் IBT ஊழியத்தால் சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகள் நல்ல பழக்க வழக்கங்களுடன், விளையாட்டுத் துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். சிலர் காவல் துறையிலும் பணிபுரிகின்றனர் என்று குறிப்பிட்டார்.

மதிய வேளையில் கோயா மக்களின் கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய நடனம் மேளதாளத்துடன் சிறப்பாக நடைபெற்றது. விதைப்பு முதல் அறுப்பு வரை அனைத்திலும் நாட்டுப்புறப் பாடல்கள் பாடிக் கொண்டே வேலை செய்வதே கோயா மக்களின் வழக்கம் என்பதை ஆடல், பாடல் மூலம் வெளிப்படுத்தினார்கள். அதன் பிறகு நாகர்கோயில் Scots College முன்னாள் முதல்வர் Prof. ஜேம்ஸ் R. டேனியல் அவர்கள் வேதாகம மொழிபெயர்ப்பின் வரலாறுகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பல கருத்துக்களைக் கூறினார். தற்போது நாம் பயன்படுத்தும் தமிழ் வேதாகமம் 1871-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வரலாற்றையும் அதற்கு உதவியாயிருந்தவர்களைப் பற்றியும் கூறினார். Intricacies of Bible Translation என்ற தலைப்பில் மொழி பெயர்ப்பின் நுணுக்கங்களையும், வேதாகம மொழிபெயர்ப்பில் (fidelity) மூல மொழியின் கருத்து மாறாமல் எதையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது என்பதையும் எடுத்துரைத்தார். அதுபோல வேதாகமம் அனைவரும் வாசிக்கும்படி தெளிவாக இருக்க வேண்டும் என்பதையும் (readability) மொழியின் தன்மைக்கு ஏற்ப இயல்பான முறையில் (Appropriateness) மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்பதையும், சீகன்பால்க் மொழியாக்கம் செய்த காலம் தொடங்கி, தற்போது நாம் பயன்படுத்தும் (Bower Version) பவர் அய்யர் மொழியாக்கம் செய்யப்பட்ட காலம் வரை பயன்படுத்தப்பட்ட வேதாகமம் மொழி பெயர்ப்புகளில் உள்ள நிறை, குறைகளை உதாரணங்கள் மூலம் எடுத்துரைத்தார்.

தரமான மொழிபெயர்ப்பு என்பது (Language style) அழகிய மொழி நடை, (Clarity) தெளிவான விளக்கம், (simplicity) எளிமையான நடை, (Correct use of words) சரியான வார்த்தைகள், (Collocation - Combination of words) வார்த்தைகளின் தொகுப்பு, (Indigenization) அனைவரும் பயன்படுத்தும் பொது வார்த்தைகளை மொழியாக்கத்தில் பயன்படுத்துதல், (Impact) மொழி பெயர்ப்பின் விளைவுகள் என்ன என்பதை உணர்ந்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பேசினார்.

மாலை வேளை பாடல் ஆராதனை முடிந்த பிறகு மலையாள மொழியில் IBT முன்னேற்றப் பணியாளர் சகோ. ரெஜி குடும்பத்தினர் ஒரு சிறப்பு பாடல் பாடினர். தொடர்ந்து மிர்கான் மொழி பெயர்ப்பாளர் சகோ. கேசப் மிர்கான் குழுவினர் தங்களது மொழியில் குறு நாடகமும், சிறுவர் இல்லப் பிள்ளைகளும், குறு நாடகம் ஒன்றை நடித்துக் காண்பித்தனர். அதன் பிறகு செய்தியாளர் Rev. ஜான் கிருபாகரன் அவர்கள் தேவ செய்தியை அளித்தார். அவர் கூறுகையில் ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது. கர்த்தருக்காக படுகின்ற கடின உழைப்பு ஒருபோதும் வீணாவதில்லை எனக்கூறி மிஷனெரிகளை உற்சாகப்படுத்தினார். அதன்பிறகு அவர் அளித்த செய்தியில் பவுலினால் புறக்கணிக்கப்பட்ட யோவான்-மாற்குவை பர்னபா ஆதரித்து மீண்டும் ஊழியத்திற்கு பயன்படுத்தியதைப் போல நாமும் புறக்கணிக்கப்பட்டவர்களை ஊக்குவித்து ஊழியத்தில் பயன்படுத்த வேண்டும் எனக் கூறினார்.

மேலும் கிறிஸ்துவை அறியாத ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த தன்னை தேவன் இரட்சித்து, எல்லா நபர்களுடன் வாழ்ந்து உலகப் பணியைச் செய்து கொண்டிருந்த நிலையில் அதை

உதறிவிட்டு வர வேண்டும் என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததால் கடந்த 54 ஆண்டுகளுக்கு மேலாக ஊழியத்தில் தன்னை எப்படி பயன்படுத்துகிறார் என்பதை தனது செய்தியில் சாட்சியாகச் சொன்னார். இந்தச் செய்தியைக் கேட்டு அநேக வாலிபர்கள் தங்களை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தனர். அதன்பிறகு சகோ. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் ஜெபித்து தேவனுக்கு நன்றி செலுத்தினார். முதல்நாள் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மறுநாள் 11.5.2024 அன்று காலை 7.30க்கு ஜெப வேளையில் IMS ஊழியர் கிரிஜா ஐசக் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார். உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள் என்ற தேவ வார்த்தையின்படி நமது இயலாமையின் மத்தியிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என தன் சாட்சியையும் திருநெல்வேலி மக்களுக்காக இந்தியாவிற்கு ஒருமுறைக் கூட வராமல் அயல்நாட்டிலிருந்து கொண்டே பெண்கள் முன்னேற்றத்திற்காக சேவை செய்த மாற்றுத்திறனாளி சாரா டக்கர் அவர்களின் வாழ்க்கை சரித்திர சம்பவங்களை கூறியது வந்திருந்த அனைவரும் உள்ளத்திலும் ஒரு எழுப்புதல் ஏற்பட உறுதுணையாய் இருந்தது. அதன் பிறகு பகல் கூட்டத்தில் கோயா விடுதி பிள்ளைகள் IBT ஊழியத்தை சிறப்பித்தும், ஊழியத்தின் விவரங்களை விவரிக்கும் விதமாக தங்கள் மொழியில் ஒரு அழகிய பாடல் பாடினர். மேலும் கோயா மொழியில் ஒடிஷா மாநில விசுவாசிகள் ஒரு கிறிஸ்தவ பாடல் பாடினார்கள்.

அதன் பிறகு செய்தியாளர் Prof. ஜேம்ஸ் R. டேனியல் அவர்கள் மொழிபெயர்ப்பின் சிறப்புகளை எடுத்துரைத்தார். அவர் தமது உரையில் பழங்காலத் தமிழ், தற்காலத் தமிழ், மற்ற மொழிகளுக்கு இல்லாத தமிழ் மொழியின் சிறப்புகள், 1611 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட KJV மொழி பெயர்ப்பின் கவிதை நடையின் சிறப்புகள், தமிழ் வேதாகமத்தை மொழி பெயர்க்க உதவிய இந்து மதப் பண்டிதர்கள் செய்த தவறுகள் போன்ற பல காரியங்களை எடுத்துரைத்தார். அதன் பிறகு IBT தலைவர் அவர்கள் வரவேற்புரையாற்றினார். முகாமிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார். தனது வரவேற்புரையில் தாய்மொழி வேதாகமம் படிப்பவர்களின் இருதயத்தை தொடும்; மனதிற்குள் ஊடுருவிப் பாயும் வல்லமையுடையது என்றும் அந்த மொழி பெயர்ப்புகளை பயன்படுத்த மக்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

அதன்பிறகு முகாமின் மைய நிகழ்ச்சியாக படுகா வேதாகமத்தையும் மற்றும் 10 மொழிகளில் சிறுவர் சித்ர வேதாகமத்தையும் ஜெபித்து தேவனுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் TELC பேராயர் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் ஐயா அவர்கள் ஜெபித்து ஆசீர்வதித்து, முதல் பிரதியை படுகா மொழிபெயர்ப்பாளர் திரு. சந்திரன் & திருமதி. அனுராதா அவர்களுக்குக் கொடுத்தார். படுகா வேதாகமத்தை அச்சிடுவதற்கு பண உதவி செய்த சார்ஜா A.G. சபையின் பிரதிநிதி, சகோ. கெர்சோம் அவர்கள் இரண்டாவது பிரதியை சகோ.ராமலிங்கத்திற்கும், மற்றுமொரு பிரதியை IBT தலைவர் திரு. செல்வின் அவர்கள் Rev. மல்லி அவர்களுக்கு வழங்கினர். அதன்பிறகு இந்திய வேதாகம சங்க மொழிபெயர்ப்பு ஆலோசகர் Rev. Dr. சுப்ரமணி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து Rev. மல்லி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். படுகா மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் அருட்பணியாளர்களும், ஊழியர்களும், விசுவாசிகளும் திரளாக இந்நிகழ்ச்சிக்கு பங்கு பெற்றனர். தொடர்ந்து *போவி, சம்பல்புரி, முண்டாரி* மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாடுகளை பேராயர் ஜெபித்து ஆசீர்வதித்து வெளியிட்டார். அதன் பிரதிகளை அந்தந்த மொழி பெயர்ப்பாளர்கள் பெற்றுக் கொண்டனர். இதன்பின் வெளியிட்ட இருளா வெள்ளியங்காடு மொழியிலுள்ள சங்கீதம், நீதிமொழிகள் புத்தகத்தை BSI Rev. Dr. சுப்ரமணி அவர்கள் வழங்க, மொழிபெயர்ப்பாளர் திரு. சாமுவேல் அவர்கள் பெற்றுக்கொண்டார். அதன் பிறகு சௌராஷ்ட்ரா, மிர்கான், போஜ்புரி, சத்திஸ்காரி, சம்பல்புரி, சோரா, கலஹாண்டியா, குவி, தெஷியா, கடபா ஆகிய 10 மொழிகளில் சிறுவர் வேதாகமம் பேராயர் அவர்களால் ஜெபித்து அர்ப்பணித்து வெளியிடப்பட்டது.

போவி புதிய ஏற்பாடு நமது இயக்கத்தின் இணை நிறுவனர் திருமதி. சுதந்திரா தேவி அவர்கள் வழங்க, மொழிபெயர்ப்பாளர் சகோதரி லதா அவர்கள் பெற்றுக்கொண்டார். அதன்பிறகு சம்பல்புரி மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாட்டை சகோ. ரிச்சர்ட் தேவராஜ் அவர்கள்

வழங்க, மொழிபெயர்ப்பாளர் சகோ. ஜெயந்த் பானி பெற்றுக் கொண்டார். முண்டாரி மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாட்டை சகோ. ரமேஸ் தங்கராஜ் வழங்க, திருமதி. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார். IMS நிர்வாகி சகோ. சேகர் அவர்கள் சிறுவர் சித்ர வேதாகமத்தை வழங்க, மொழிபெயர்ப்பாளர் சகோ. கேசப் மிர்கான் அவர்கள் பெற்றுக்கொண்டார். நான்கு மொழிகளில் பாடல் புத்தகங்களை Rev. Dr. சுப்ரமணி அவர்கள் ஜெபித்து வெளியிட்டார். அதனை மொழிபெயர்ப்பாளர்கள் பெற்றுக் கொண்டனர்.

IBT-யின் ஊழிய விவரங்கள் அடங்கிய www.ibtword.com என்ற புதிய இணையதளத்தை பேராயர் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் அவர்கள் ஜெபித்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து Rev. ஜான் கிருபாகரன் அவர்கள் சம்பல்புரி மொழியில் வெளியிடப்பட்ட வேதாகம செயலியை (App) ஆசீர்வதித்து ஜெபித்தார். அதன்பிறகு படுகா மக்கள் தங்கள் பாரம்பரிய உடை அணிந்து நடனத்துடன் பாடல் பாடி, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பிறகு சிறப்பு விருந்தினர்கள், செய்தியாளர்கள், படுகா மொழிபெயர்ப்பாளர்கள், தாங்குநர்கள் அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு, குவி மொழிபெயர்ப்பாளர் சகோ. சாமுவேல் மற்றும் அவரின் மனைவி தங்கள் மொழியில் ஒரு சிறப்பு பாடலை பாடினார்கள். பிறகு படுகா மொழியில் முதன்முதலாக மொழிபெயர்ப்பு ஊழியம் ஆரம்பித்த நாளிலிருந்து முழு வேதாகமம் வெளியீடு வரை நடைபெற்ற அனைத்து ஊழிய விபரங்களையும், காணொலி வாயிலாக மக்களுக்கு காண்பிக்கப்பட்டது. அன்றைய தினம் மதிய உணவிற்கு பிறகு சீகன்பால்க் வாழ்க்கை வரலாற்றை சென்னையிலிருந்து வந்திருந்த சிறப்புக் குழுவினர் நடித்துக் காண்பித்தனர்.

சகோ. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் பணித்தள செய்திகளை பகிர்ந்து கொண்டார். அவர் தமது உரையில், வேதாகம மொழிபெயர்ப்பு மிகவும் அவசியமானது, மேலும் கடினமானது என்றும் அதை அர்ப்பணிக்கப்பட்ட நபர்களால் மட்டுமே செய்ய இயலும் என்பதை எடுத்துக் கூறினார். அதன் பிறகு சிறப்பு செய்தியாளர் Prof. ஜேம்ஸ் டேனியல் அவர்கள் மொழிபெயர்ப்பின் வரலாற்று சம்பவங்களை விவரித்துக் கூறினார். மொழிபெயர்ப்பு என்பது ஒரு இயக்கம் செய்ய வேண்டிய உன்னதமான பணி என்றும், ஒரு நோக்கத்தோடு செயல்பட வேண்டும் எனவும், ஒவ்வொரு வேதாகம மொழி பெயர்ப்பும் அந்தந்த மொழிக்கு உயிரோட்டம் தரக்கூடியவை எனவும், (Translation gives liberty to the people) ஆன்மீக மீட்பையும், விடுதலையையும் அளிக்கிறது என்றும் கூறினார். அதன் பிறகு மாலை நிகழ்ச்சியில் மிர்கான் ஆதிவாசி மக்களும், கோயா பிள்ளைகளும் தங்கள் மொழிகளில் பாடல் பாடி கடவுளைத் துதித்தார்கள். இயேசு கிறிஸ்து தமது அருளுரையில் விதை விதைப்பவன் உவமையைப் பயன்படுத்தி உரையாற்றுவது போல ஆதிவாசி மக்கள் தங்கள் வாழ்வின் எல்லா நிகழ்ச்சிகளையும் அழகிய ஆடல் பாடல் மூலம் வெளிப்படுத்தி-னார்கள். அதன் பிறகு மாலை வேளையில் திருமதி. ஜோதி ஜான் கிருபாகரன் அவர்கள் சங்கீதம் 119-ஐ மனப்பாடமாக அறிந்திருந்தும் நேரமின்மைக் காரணமாக குறிப்பிட்ட பல சிறப்பு வசனங்களை மட்டும் மனப்பாடமாகச் சொன்னார். அதன்பிறகு Rev. ஜான் கிருபாகரன் அவர்கள் தேவ செய்தியை மத்தேயு 24, 25 ஆம் அதிகாரங்களில் உள்ள சம்பவங்களை வைத்து ''விழித்திருங்கள், ஆயத்தமாயிருங்கள், விவேகமுள்ள-வராயிருங்கள்'' என்ற தலைப்பில் செய்தியை இயேசுவின் வருகைக்கு முன் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும் என்று பகிர்ந்து கொண்டார்.

முகாமின் இறுதி நாளில் 12.5.2024 காலைத் தியானத்தில் திருமதி. ஜோதி ஜான் கிருபாகரன் அவர்கள் அன்னையர் தினத்தை முன்னிட்டு அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார். அதன் பிறகு கீதம், வேதம், பாதம் என்ற முறையில் மனப்பாடமாக வேத வசனங்களை படிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். 1 நாளா 4 : 10ல் உள்ள யாபேசின் ஜெபம் என்ற தலைப்பில் “யாபேஸ், வேதனைகள் மத்தியில் வாழ்ந்த போதும் கர்த்தரை நோக்கி *‘என் எல்லையை பெரிதாக்கும் தீங்கு என்னை துக்கப்படுத்தாமல் இருக்கட்டும் என வேண்டிக் கொண்டதைப் போல’* நாமும் நம்பிக்கையோடு ஊழியம் செய்ய வேண்டும் என அனைவரையும் உற்சாகப்படுத்தினார். அதன் பிறகு காலை 9.30 மணிக்கு ஞாயிறு ஆராதனை நடைபெற்றது. சகோ. ராஜகுமார் அவர்கள் பாடல் குழுவினரோடு இணைந்து வழிபாட்டு நிகழ்ச்சியை பாடல்கள் பாடி நடத்தினார். அதன்பிறகு Rev. ஜான் கிருபாகரன் அவர்கள் தேவ செய்தியை அளித்தார்.

அப்போஸ்தலர் 17:6-இல் உள்ள வசனத்தின்படி இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் உலகத்தை கலக்குகிறவர்களாக இருந்தார்கள். யூதர்களுக்கும் அன்றைய ஆட்சியாளர்களுக்கும் சிம்மச் சொப்பனமாக இருந்தார்கள். அதுபோல இயேசுவின் சீடர்களாகிய நாமும் எதற்கும் பயப்படாமல் ஊழியம் செய்ய வேண்டும் எனக் கூறினார். அவர் தமது செய்தியில் யுவான் ராபர்ட்ஸ் வேல்ஸ் நாட்டில் எழுப்புதல் தீ பரவ காரணமாயிருந்தார். ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். ஆட்சியாளர்கள் அலறினர். அதிகாரங்கள் ஆட்டம் கண்டன. மக்கள் பாவத்திற்கு அஞ்சி விலகியோடினர். இவ்வாறு உலகத்தை சீர்திருத்துகிறவர்கள் கிறிஸ்துவின் தொண்டர்களே என பறைசாற்றினார். அதன்பிறகு பேராயர் Rev. எட்வின் ஜெயக்குமார் அவர்கள் ஜெபிக்க, ஞாயிறு ஆராதனை நிறைவு பெற்றது.

ஐந்து மொழிகளில் உள்ள தொகுப்பு பாடல் புத்தகமும், 16 மொழிகளில் IBT ஜெபக்குறிப்பு அட்டைகளும் பிரதிஷ்டை செய்து IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள் வெளியிட்டார். பாடல் புத்தகத்தை IMS மிஷனெரி திருமதி. கிரிஜா அவர்களும் ஜெப அட்டைகளை அந்தந்த மொழிகளிலுள்ள மொழிபெயர்ப்பாளர்களும் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து சகோ. ராஜகுமார் அவர்கள் வேதாகமத்திலிருந்து கேள்விகளைக் கேட்டு சரியாக பதிலளித்த நபர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இறுதியாக சகோ. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் அனைத்து மொழி பெயர்ப்பாளர்களையும் மேடைக்கு அழைத்து அறிமுகப்படுத்தினார். அனைத்து IBT ஊழியர்களுடன் IBT முன்னணித் தலைவர்கள் அமர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். வரும் ஆண்டுகளில் 5 புதிய மொழிகள் கண்டுபிடிக்க வேண்டும் மற்றும் 4 மொழிகளில் முழு வேதாகமம் 2029-ஆம் ஆண்டு வெளியிட தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும், இனிவரும் காலங்களில் மற்ற ஊழிய நிறுவனங்களோடு இணைந்து பணிபுரிந்தால் பல இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்ற இயலும் என்பதை சகோ. சாமுவேல் ஞானதாஸ் வலியுறுத்திக் கூறினார்.

நிறைவாக IBT செயலாளர் சகோ. வரமணிராஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற, பேராயர் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் அவர்கள் ஜெபித்து ஆசீர்வாதம் கூற, முகாம் இனிதே நிறைவு பெற்றது.

*தொகுப்பு : சகோ. **S.N.** சங்கர்*

# பணித்தளச் செய்திகள்

*மிஷனெரி : சகோ. இஸ்ரவேல் எட்லா*
*பணித்தளம் : சந்தோஷ்பூர் (ஒடிஷா)*

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக கோண்டாபுரி, சரகாண்டி, தசப்பூரியாகுடா, வான்டியா, சோரிசாபாதர், நங்கநால், சந்தோஷ்பூர், தலைகுடாதன்டா, பிரிகுடா, கும்பர்பாரா, ஜக்தல்பூர், பன்சுலி, ஜபகுடா, தானிகுடா, கெர்லிமால், ரஜோடா, குட்னியாகுடா, அடிபசிகுடா, பஜர்காடா, ரூனிகுடா, ஜனபானி, மிர்மின்டா, பைடாபாலி, சுர்லி, மிர்கான் தெரு ஆகிய கிராமங்களில் பலரைச் சந்தித்து, நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். மேலும் ஞாயிறு ஆராதனை சந்தோஷ்ப்பூர், நங்கனால் ஊர்களிலுள்ள சபைகளில் நடத்தினேன். உபவாச ஜெபக்கூட்டமும் நடத்தப்பட்டன. இதில் IBT அலுவலர்கள், ஊழியர்கள், தாங்குனர்கள் அனைவருக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டன. என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. சந்திரகாந்தா பர்லா*
*மொழி : முண்டாரி*
*பணித்தளம் : பாலுப்பள்ளி (ஒடிஷா)*

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகத்தில் நீதிமொழிகள் புத்தகம் அதிகாரம் 10 : 21-ஆம் வசனம் முதல் அதி. 31 : 31-ஆம் வசனம் வரையிலும், பிரசங்கி புத்தகம் அதி. 1:1 முதல் அதி. 2 : 26-ஆம் வசனம் வரையிலும், கணினியில் கீ-இன் செய்யப்பட்டது.

மிஷனெரிப் பணிக்காக சில கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டேன்.

முண்டாரி மொழி நன்கு தெரிந்த முதியவர்களான திரு. மார்ஷல், சோரஜ்முண்டா மற்றும் ஜனுஸ் முண்டா ஆகியோரைச் சந்தித்து, மொழி பெயர்ப்பிற்கு சரியான அர்த்தம் பொருந்தக்கூடிய வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டேன். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட புதிய ஏற்பாடு புத்தகங்கள் துரிதமாய் விநியோகிக்கப்படவும், இடையூறுகள் நேராதபடி கர்த்தர் பாதுகாப்பைக் கொடுக்க ஜெபிப்போம்.

----------•----------

<u>*முன்னேற்றப் பணியாளர் : சகோ. ராபர்ட்*</u>
<u>*பணித்தளம் : மேட்டுப்பாளையம்/கோவை*</u>

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!

கடந்த நாட்கள் முழுவதும் மேட்டுப்பாளையத்தில் முன்னேற்றப் பணி செய்யவும், அலுவலகப் பணிகளைச் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். வெயிலின் வெப்பநிலை அதிகமாக இருந்தாலும், பிரயாணத்தில் எந்த தீமையும் ஏற்படாமல் கர்த்தர் சுகத்தோடு இம்மாத பணிகளைச் செய்து முடிக்க கிருபை செய்தார். மேட்டுப்பாளையம் டவுன், சிறுமுகை, காரமடை, குந்தா காலனி, டீச்சர்ஸ் காலனி, CTC Opp-Side, பாரதி நகர், கே.கே. நகர், சேரன் நகர் 1, 2, அன்னூர் ரோடு, சிறுமுகை ரோடு, சங்கர் நகர், ஆவின் நகர், கெண்டயூர் பேரிக் கம்பெனி, சாந்தி நகர், பெரியார் வீதி, ஹவுசிங் யூனிட் போன்ற பகுதிகளில் நமது தாங்குனர்களைச் சந்தித்து, 2024-ஆம் ஆண்டிற்கான லோகோஸ் நோட்டீஸ் கொடுக்கவும், ஜெபித்து காணிக்கையை பெற்றுவர கிருபை செய்தார். திரு. ஜெபக்குமார் அவர்களுக்காகவும், குடும்பத்தினருக்காகவும், பணி செய்யும் இடத்தில் நிரந்தரமான பணி அமர்த்தும் காரியத்திற்காகவும் ஜெபியுங்கள். திரு. சுவாமிநாதன் என்பவர் கடை வியாபாரத்திற்காகவும், தொழில் நஷ்டம் ஏற்பட்டதாகவும், வியாபர தொய்வும் ஏற்பட்டதாக கூறினார்; ஜெபியுங்கள். திரு. ஐசக் அவர்களுக்கு கடந்த நாட்களில் கண்களில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இப்பொழுது சுகத்தோடு பார்வை தெளிவானதற்காகவும், பணத்தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகவும் ஸ்தோத்திரம். மற்றும் நமது தாங்குனர்களின் பிள்ளைகள் +2, 10-ஆம் வகுப்பு தேர்வு எழுதி, நல்ல மதிப்பெண்கள் வாங்கியவதற்காக கர்த்தரைத் துதியுங்கள்.

# உலகச் செய்திகள்

★ வட அமெரிக்க நாடான மெக்சிகோவின் முதன் பெண் அதிபராகிறார் கிளாடியா ஷீன்பாம்.

★ உள்ளூர் மக்களின் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக 24 மணி நேரமும் விளக்கை அணைத்து ஹாஸ்டலில் மறைந்து இருக்கிறோம் என கிர்கிஸ்தானில் மருத்துவம் பயிலும் இந்திய மாணவர் வேதனை.

★ உலகில் மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான சூடான் நாட்டில் 11 மில்லியன் மக்கள் கடுமையான வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்கு சூடானின் தலைநகரம் ஜூபா 2011-இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து, இந்நாடு உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக உள்ளது. இந்நாட்டில் எண்ணெய் வளம் அதிகம் இருந்தபோதும், அதன் பொருளாதாரத்தை இன்னும் வலுப்படுத்தவில்லை.

★ 2018-ஆம் ஆண்டு தன்னுடைய 99 வயதில் மரித்த “அமெரிக்க போதகர்” என்று பிரசித்தி பெற்ற, பல்லாண்டுகள் சுவிசேஷ செய்தியை அறிவித்து வந்த “பில்லி கிரகாம்” அவர்களின் பணியை நினைவு கூறத்தக்கதாக, அவருடைய வெண்கலச் சிலை இவ்வருடம் மே 16-ஆம் தேதியன்று அமெரிக்க தலைநகரில் திறக்கப்பட்டது.

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. கடந்த மே மாதம் ஆனைகட்டியிலுள்ள பெத்தானி வளாகத்தில் நடைபெற்ற IBT லோகோஸ் முகாமில் வெளியிடப்பட்ட படுகா மொழி வேதாகமங்கள் ஊட்டி, கோத்தகிரி, மேட்டுப்பாளையத்திலுள்ள படுகா சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து படுகா மக்களுக்கு விநியோகம் செய்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். வேதாகமங்களை வாங்கிய மக்கள் அனுதினமும் வேதாகமத்தை வாசித்து, தியானித்து, கர்த்தருக்குள் வளர ஜெபியுங்கள்.

2. IBT மூலமாக இதுவரை 2 மொழிகளில் வேதாகமங்களும், 16 மொழிகளில் புதிய ஏற்பாடும், 8 மொழிகளில் சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்களும், 37 மொழிகளில் 69 நற்செய்திப் புத்தகங்கள் வெளியிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டுள்ள-தற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். அடுத்த IBT லோகோஸ் முகாமில் குறைந்தது 4 மொழிகளில் வேதாகமும், இதுவரை புதிய ஏற்பாடு வெளியிடப்படாத மொழிகளில் புதிய ஏற்பாடும் வெளியிட ஜெபியுங்கள்.

3. கல்வி கல்லாதோர், பார்வையற்றோர் பயன்படும் விதமாக இதுவரை IBT மூலமாக 3 மொழிகளில் புதிய ஏற்பாடு ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Audio Device) வெளியிட்டு, விநியோகித்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். IBT மூலமாக மொழிபெயர்ப்பு செய்து வரும் மீதமுள்ள மொழிகள் அனைத்திலும் இப்பணி ஆரம்பிக்கப்பட்டு, ஒலிப்பதிவுக் கருவிகள் விநியோகிக்கப்பட ஜெபியுங்கள்.

4. திருநெல்வேலியில் வசித்துவந்த IBT-இன் தாங்குநரும், பிரதிநிதியாகவும் செயல்பட்டு, IBT ஊழியத்திற்கு உதவியாக இருந்த திரு. D.G. தம்புராஜ் அவர்கள் தன்னுடைய 75-வது வயதில் கடந்த 05.05.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரைப் பிரிந்து துயரத்திலுள்ள அவரது குடும்பத்ினருக்கு கர்த்தர் பரத்திலிருந்து ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்க ஜெபியுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
Web : www.ibt1.com


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS
**CENTRAL BANK OF INDIA**
A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBIN0282057

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of: **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Printed by: **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.

**SATHTHIYA VAARTHAI - TAMIL**
Date of Publishing : 2nd & 3rd July 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**
**RNI No. 82166**